1979 பிப்ரவரி 26]

கையாள இந்த அரசு முன்வருமா? மூன்றாண்டுகளாக வரும் வரும் என்று வலியுறுத்துகிறோம், கேட்கிறோம் என்பதற்குப் பதிலாக அவர்களை ஒத்துக்கொள்ளக் கூடிய வகையில் செய்வதற்கு வேறு ஏதாவது முறையைக் கையாண்டு அவர்களை ஒத்துக் கொள்ளவைக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அஞ்சல் மூலம் வலியுறுத்துவதோடு நின்றுவிடாமல் டெல்லி சென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இதுபற்றி தீவிர உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இதன் தேவையை வலியுறுத்தி ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட நாடாளுமன்றத்தில் இதுபற்றி கேள்விகள் எழுப்பி அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி வருகிறார்கள். இன்னும் கடுமையான முறையில் மத்திய அரசு உணரக்கூடியவகையில் எந்த வகையில் இதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமோ அப்படிக் கொண்டுவர கண்டிப்பாக மாநில அரசு முயற்சியினை மேற்கொள்ளும்.

வைகைத் திட்டத்தின்கீழ் உள்ள துணைக் கால்வாய்கள்.

* வினா எண். 193.— திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை சீரமைப்புத் திட்டத்தின்கீழ், விறகனூர் மதகு அணையிலிருந்து வெட்டப்பட்ட துணைக் கால்வாய்கள் சென்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்டதினால் அரசுக்கு இழப்பு எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்தை சரியாக செயல்படுத்தாததுதான் அதிக இழப்புக்கு காரணமா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சுமார் ரூ. 20 லட்சம்.

(ஆ) இல்லை. அவ்வாறு சொல்ல முடியாது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண். 194 —திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை ஆற்றுப் பகுதியில் துணைக்கால்வாய்கள் எவையேனும் வெட்டப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அந்தக் கால்வாய்கள் வெள்ளத்தில் அடித்துச் செல் லப்பட்டதா?

(ஈ) ஆம் எனில் அதனால் எவ்வளவு லட்சம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) வைகை ஆற்றின் குறுக்கே வீரகனூருக்கு அருகிலும் பார்த்தீபனூருக்கு அருகிலும் இரண்டு மதகு அணைகள் கட்டப் பட்டு, ஒவ்வொரு மதகு அணையிலிருந்தும் தனித்தனியே இரண்டு பிரதானக் கால்வாய்கள் (இடது பிரதானக் கால்வாய், வலது பிரதானக் கால்வாய்) வெட்டப்பட்டுள்ளன.

(இ) மேற்கூறப்பட்ட கால்வாய்களில் கடந்த 1977ஆம் ஆண்டில் சில இடங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டது.

(ஈ) அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 27.490 லட்சமாகும்.

திரு. வ.மு. சுப்பிரமணியன் : ஒப்பந்தம் செய்த முறையே தவறு என்று சொல்லப்படுகிறது. ஒப்பந்தத்திற்கு மாறாக ஒப்பந்தக்காரர்கள் துணைக் கால்வாய்களுக்கு கரைகள் அமைக்க கரம்பை மண்ணைப் பயன்படுத்துவதற்கு பதிலாக ஆற்றுமண லைப் பயன்படுத்தினார்கள். ஆகவேதான் அவை வெள்ளத் தில் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே அவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அது அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் தவறு செய்ததனால் இது ஏற் பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லு கிறார்கள். அது அரசின் பரிசீலனைக்கு வந்தால் நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் தவறு ஏற்பட்டதற்கு காரணம், இதற்கான கான்டிராக்டில் ஊழல் என்று சொல்லப்படுகிறது. இன்னும் சில கான்டிராக்டர்கள் ஒழுங்காக வேலை செய்தவர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கு பணம் வழங்கப்படாமல், ஊழல் செய்த வர்கள் பணம் வாங்கிவிட்டார்கள் என்று தெரிகிறது. ஆகவே அரசு இதை பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்க முன் வருமா?

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊழல் எங்கு நடந்தாலும் அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1977—78-ல் வந்த வெள்ளத்தின் காரணமாக அரசுக்கு வைகை கால்வாயில் 27½ லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். மேலும் வைகையில் வந்த பெரும்வெள்ளத்தால், பல கால்வாய்கள், பல ரோடுகள் எல்லாம் சேதமடைந்தன. முக்கியமாக கால்வாய்களை பாதுகாப்பதற்காக கரையோரங்களில் இருபுறங்களிலும் கரைகளைப் பலப்படுத்தி பாதுகாக்கப்படும் என்று அங்கே வந்திருந்த அமைச்சர்கள் சொன்னார்கள். அதற்கான திட்டம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1977—78 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் இந்த இரண்டு பிரதான கால்வாய்களிலும் உடைப்பு ஏற்பட்டத்தின் காரணமாக அரசுக்கு 27½ லட்சம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டது. மேலும் இது போன்ற சேதங்கள் வராதவாறு தடுக்க, கரைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இதில் ஒப்பந்தம் முறையாக செய்யப்படவில்லை என்பதைத்தான் எல்லோரும் சொல்லிக்கொள்கிறார்கள். இந்த அணையில் கரம்பு மண் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஆற்று மண்ணை அள்ளி போட்டதினால் தான் இந்த உடைப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இப்படி ஒப்பந்தத்திற்கு மாறாக ஆற்றுமண்ணை உபயோகித்த கான்டிராக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்தேன், ஆற்றுமணலை மட்டும் உபயோகித்து வாய்க்கால் கட்டப்பட்டிருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், யார் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம் என்பதை மீண்டும் உறுதியாக சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்கள் விராகனூர் அணையைப் பற்றி சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, தேனி தொகுதியைச் சேர்ந்த ஆத்தங்கரைப் பட்டி என்கின்ற இடத்தில் வைகை அணையிலிருந்து தண்ணீரை

எடுத்துச்செல்லும் கால்வாயும் சேதமடைந்து பல லட்சக் கணக்கான ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய விவரம் என்ன என்பதை தெரிவிக்க இயலுமா? இந்தச் சேதத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலுள்ள விவரங்கள் பற்றிய குறிப்புகள் என்னிடம் இப்போது இல்லை. பின்னால் சேகரித்து பதிலாக தருகிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, பாசனத் துறையில் கோடை காலத்தில் கால்வாய்களைவெட்டும்வேலையை செய்துவிட்டு, அதற்குரிய பில்களை மழை காலத்தில் வாங்குவதாக தெரிகிறது. காரணம் மழை காலத்தில் வெட்டப்பட்ட இடம் கூட அழிந்து போய்விடுகிறது. இப்படிப்பட்ட ஊழல் நடைபெற்று வருகிறது, ஆகவே, இப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க பாசனத்துறை முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கண்டிப்பாக முயற்சி செய்யும்.

வேதாரண்யம் பகுதியில் உற்பத்தியாகும் புகையிலை.

*வினா எண் 195—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தி ஆகிற புகையிலை விற்பனை ஆகாமல் இருக்கிறது என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுடைய நிலை அறிந்து புகையிலையிலிருந்து பலவித தொழிற்சாலை துவக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) மக்கள் உபயோகத்திற்காக புகையிலையை வாங்கி அதை மெல்லும் புகையிலையாக (Chewing Tabacco) மாற்றுவதற்கு ஒரு கூட்டுறவு தொழிற் சங்கம் ஏற்படுத்துவது குறித்து